

நிலக்கோட்டை தொகுதி தி.மு.க. வெற்றி வேட்பாளர் எஸ். நாகஜோதியை ஆதரித்து அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக தீவிரமாக பிரச்சாரம் செய்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். சேவுகம்பட்டியில் நடைபெற்ற பிரச்சாரத்தில் வேட்பாளர் எஸ். நாகஜோதி, பேரூர் கழகச் செயலாளர் தங்கராஜ் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### நிலக்கோட்டை தொகுதி கழக வெற்றி வேட்பாளர்

# எஸ்.நாகஜோதியை ஆதரித்து அமைச்சர் ஐ.பெரியசாமி தீவிரப் பிரச்சாரம்!

## கிராம மக்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிப்போம் என உறுதி அளித்தனர்!

திண்டுக்கல்,ஏப்.18-

நிலக்கோட்டை தொகுதி கழக வெற்றி வேட்பாளர் எஸ்.நாகஜோதியை ஆதரித்து அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக தீவிரமாக பிரச்சாரம் செய்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். இராஜதானிக்கோட்டை, விராலிப்பட்டி, பழைய வத்தலக்குண்டு, வத்தலக்குண்டு காளியம்மன் கோவில், எஸ்.வாடிப்பட்டி, பட்டிவீரன்பட்டி பகுதிகளில் அமைச்சர் ஐ. பெரியசாமி பிரச்சாரம் செய்யும்போது கிராம மக்கள் தங்கள் வாக்கு உதயசூரியன் சின்னத்திற்கு என உறுதி அளித்தனர்.

நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இராஜதானிக்கோட்டை, விராலிப்பட்டி, பழைய வத்தலக்குண்டு, வத்தலக்குண்டு காளியம்மன் கோவில், எஸ்.வாடிப்பட்டி, பட்டிவீரன்பட்டிக்கு வந்தபோது கிராம மக்கள் ஆரத்தி எடுத்து மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கடந்த 5 ஆண்டுகளாக தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்த ஆட்சி பெண்களின் முன்னேற்றத்திற்காக ஆட்சியாக செயல்பட்டது. மகளிர் உரிமைத்தொகை, காக்கும் கரங்கள், புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம், இல்லம் தேடி மருத்துவம், போன்ற திட்டங்களை செயல்படுத்தியதால் பெண்கள் போற்றும் ஆட்சியாக தமிழகத்தில் இன்றுவரை தி.மு.க. ஆட்சி உள்ளது. நிலக்கோட்டையில் மகளிருக்கான கலைக்கல்லூரி, விவசாயிகள் நலன் காக்க சிறுமலை நீர்த் தேக்கம், நிலக்கோட்டை மக்களுக்கு அணைப்பட்டி பேரணையிலிருந்து குடி தண்ணீர், மருதாநதியிலிருந்து சேவுகம்பட்டி குடி தண்ணீர் கொண்டுவந்தது, தி.மு.க. அரசு என்றார். இப்போது மகளிருக்கு தேர்தல் அறிக்கையில் ரூ. 8 ஆயிரத்திற்கான கூப்பன் வழங்கப்பட உள்ளது. ஏன் முதல்வர் மகளிரிடம் அந்த கூப்பன்களை வழங்க வேண்டுமென உத்திரவு போட்டிருக்கிறார் என்றால், மகளிர்தான் குடும்ப சூழ்ந்து உணர்ந்து சிக்கனமாக செலவு செய்வார்கள். தங்களுக்கு வேண்டிய வீட்டு உபயோகப் பொருட்களை மட்டும் வாங்குவார்கள் என்றார். அப்போது அங்கு கூடியிருந்து நூற்றுக் கணக்கான பெண்கள் மகிழ்ச்சியில் தைதட்டி தங்களது ஓட்டு உதயசூரியனுக்கே. மீண்டும் தமிழக முதல்வராக ஸ்டாலின் அண்ணன்தான் அவர்கள்தான் வருவார்கள் என்றார்கள். நான் எப்போது சொன்ன வார்த்தையை காப்பாற்ற வேண்டுமென்று உறுதியான மன நிலையில் இருப்பவன். உங்களுக்கு ஒன்றை மட்டும் சொல்கிறேன். நிலக்கோட்டை தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் எஸ்.நாகஜோதி அதிக ஓட்டு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெற்று உங்களின் குறைகளை கேட்டறிந்து அதை நிவர்த்தி செய்வார். அதற்கு நீங்கள் வாக்களிக்க வேண்டிய சின்னம் உதயசூரியன், உதயசூரியன், உதயசூரியன் என்றார். தேர்தல் பிரச்சாரத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் ஆர்.நாகராஜன், நிலக்கோட்டை தொகுதி பொறுப்பாளர் கம்பம் பாண்டியன், தி.மு.க. ஒன்றிய செயலாளர் கே.பி. முருகன், கனகதுரை, கனிக்குமார், பேரூர் கழக செயலாளர்கள் சின்னத்துரை, சேவுகம்பட்டி தங்க ராஜ், பட்டிவீரன்பட்டி அருண்குமார், பேரூராட்சி மன்ற தலைவர்கள் வனிதா தங்கராஜன், சிதம்பரம், தி.மு.க. நிர்வாகிகள் ரெக்ஸ், சக்திவேல் நாகஜோதி, திண்டுக்கல் மாநகர வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் வெங்கடேஷ் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வேட்பாளர் கு. பிச்சாண்டியை ஆதரித்து

# பொறியாளர் அணி எஸ்.கே.பி. கருணா வாக்குசேகரிப்பு!

## கீழ்பென்னாத்தூர் துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில்!

கீழ்பென்னாத்தூர், ஏப்.18-

கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கு. பிச்சாண்டி அவர்களுக்கு ஆதரவாக தி.மு.க. மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணா துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பாலானந்தல், பாரதிபுரம், மாதலாம்பாடி, களஸ்தம்பாடி, சானானந்தல், வள்ளிவாகை, குன்னியந்தல் உள்ளிட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



கீழ்பென்னாத்தூர் தொகுதியில் கழக வேட்பாளர் கு. பிச்சாண்டி ஊராட்சிகள் தோறும் நேரில் சென்று கழக ஆட்சியில் மகளிர்க்கு செய்த சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு சேகரித்தார்.

அப்போது பொது மக்களை சந்தித்து அவர் பேசுகையில்: நமது வேட்பாளர் கு.பிச்சாண்டி கடந்த கால ஆட்சியில் கீழ்பென்னாத்தூர் தொகுதியில் ஸ்டேடியம் அமைத்து கொடுத்தார், பேருந்து நிழற்குடைகள் அமைத்து கொடுத்தார், புதிய நியாய விலைக் கடைகள் திறந்தார், சிறு பாலங்கள் கட்டிக் கொடுத்தார், சாலைகள் அகலப்படுத்தி தார் சாலைகள் அமைத்து கொடுத்தார் போன்ற பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தொகுதி வளர்ச்சிக்காக இரவு பகலாக உழைத்து வருபவர் கு. பிச்சாண்டி அவர்கள். எளிமையானவர், அனைவரும் எளிதில் அணுகக்கூடியவர். ஆகையால் அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.பி. அண்ணாமலை, ராமஜெயம் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், மகளிர் அணி, மாணவர் அணி, இளைஞர் அணி அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

மேலும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு பிரச்சாரத்தை உற்சாகமாக முன்னெடுத்தனர்.




மதுரை மாநகர் மாவட்டம் கே.புதூரில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார், உடன் கழக மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மாநில தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



திருவண்ணாமலை மாநகரில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.சல்மான் தலைமையில் 1000க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், ப.ஷெரீப், எம்.எஸ்.எம்.மாலிக், பீரங்கி.வெங்கடேசன் உட்பட பலர் உள்ளனர்.

### ஒன்றிய அரசின் மறுவரையறைக்கு எதிராக கருப்புக் கொடியை ஏற்றிவைத்து

# மறுவரையறை மசோதா நகலை தீயிட்டுக் கொளுத்தினார் அமைச்சர் எ.வ.வேலு!

## சட்ட மசோதாவை திரும்பப் பெறு என முழக்கம்!

திருவண்ணாமலை, ஏப்.18-

ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறைக்கு எதிராக கருப்புக் கொடியை ஏற்றி வைத்து, தொகுதி மறுவரையறை மசோதா நகலை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தீயிட்டுக் கொளுத்தினார். சட்ட மசோதாவை திரும்பப் பெறு என நிர்வாகிகளுடன் முழக்கமிட்டார்.

2026ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்திய நாடாளுமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது. இதில் மக்களவை இடங்கள் 543லிருந்து சுமார் 850ஆக அதிகரிக்கப்படலாம்.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யும் இந்த நடவடிக்கை, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா போன்ற தென்மாநிலங்களின் அரசியல் அதிகாரத்தைக் குறைக்கும்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துங்கள், அளவாக குழந்தைகளை பெற்றுக் கொள்ளுங்கள், குடும்பக் கட்டுப்பாட்டை கடைபிடியுங்கள் என்று ஒன்றிய அரசு சொன்னதை எல்லாம் தமிழ்நாடு, இந்தியாவிற்கே வழிகாட்டும் அளவிற்கு செயல்படுத்திக் காட்டியது. இதற்கு தண்டனையாக ஒன்றிய பாஜக அரசு தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகளை குறைத்து நமக்கான அதிகாரத்தை பறித்திட நினைக்கிறது.

இதைக் கண்டித்து, தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் கருப்புக் கொடியை ஏற்றிவையுங்கள், தொகுதி மறுவரையறை மசோதாவை தீயிட்டு கொளுத்தி நம் எதிர்ப்பை பதிவு செய்யுங்கள் என்ற அவர் ஆணையை ஏற்றி

16.04.2026 வியாழன் காலை 9.30மணிக்கு, திருவண்ணாமலை, வேட்டவலம் சாலையில் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் இல்லத்தில் கருப்புக் கொடியை ஏற்றினார். பின்னர் ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறை நகலை தீயிட்டுக் கொளுத்தினார். பின்னர் ஆர்ப்பாட்டம் இது ஆர்ப்பாட்டம் கருப்புக் கொடிஆர்ப்பாட்டம்.

ஆர்ப்பாட்டம் இது ஆர்ப்பாட்டம் துரோகி பழனிசாமியைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்.

கண்டிக்கிறோம் கண்டிக்கிறோம்பாசிச பாஜக அரசை கண்டிக்கிறோம்

திரும்பப் பெறு திரும்பப் பெறு!

பாசிச அரசே, பாஜக அரசே!

தொகுதி மறுவரையறை சட்ட வரைவை

திரும்ப பெறு! திரும்ப பெறு!

சதி செய்யாதே, சதி செய்யாதே தமிழ்நாட்டின் எண்ணிக்கையை குறைக்க சதி செய்யாதே!

குறைக்காதே குறைக்காதே தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை குறைக்காதே

தோற்கடிப்போம், தோற்கடிப்போம்

பாஜகவின் சதியை தோற்கடிப்போம்

பழனிசாமியின் துரோகத்தை தோற்கடிப்போம்

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!

இதனைத் தொடர்ந்து, திருவண்ணாமலை மாவட்ட முழுவதும் உள்ள மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், தொகுதி மறுவரையறையில் தமிழ்நாட்டிற்கு துரோகம் இழைக்கும் ஒன்றிய அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், கருப்புக் கொடியேற்றி வருகின்றனர்.

கழக நிர்வாகிகளும், தோழர்களும் வீடு, வீடாக சென்று கருப்புக் கொடியை வழங்கி, தமிழ்நாட்டிற்கு வரக்கூடிய பேராபத்தை விளக்கியும், வெல்லும் தமிழ்பெண்கள் வீடு, வீடாக சென்று "தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்" என்று கோலமிட பரப்புரை செய்து வருகின்றனர்.



இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. வெற்றி வேட்பாளர் இராணிப்பேட்டை மாவட்டக் கழக செயலாளர் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி.அவர்கள் வாலாஜா தெற்கு ஒன்றியம் பாரதிநகர், பொன்னம்பட்டு, TNHB சிப்காட், ராஜுவ்காந்தி நகர், புளியந்தாங்கல், அம்பேத்கர் நகர், இந்திராநகர், மலைமேடு, வடகால் நரசிங்கபுரம், இந்திராநகர், சாமி நகர், வ.உ.சி. நகர், பெல் பேருந்து நிலையம் எதிரில், திரு.வி.க.நகர், சிப்காட் வ.உ.சி.நகர், அண்ணாநகர், பெரியதாங்கல், மேட்டுதெங்கால், காமராஜ் நகர், அண்ணாநகர், தெங்கால், அவரக்கரை அவரக்கரை ADC, கீழ் மணியம்பட்டு, மணியம்பட்டு, புளியங்கண்ணு மந்தவெளி, பகுதிகளில் கழக ஆட்சியின் சாதனைகள் எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.இதில் விசிக சீ.மா .ரமேஷ்கர்ணா, T.C.பத்மநாபன் ஜெயந்தி திருமூர்த்தி மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் கழகத்தினர் உடனிருந்தனர்.



கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் தொடர் பரப்புரையில் வாசுதேவநல்லூர் தொகுதியின் வெற்றி வேட்பாளர் இ.ராஜாவிற்கு, கழக மாற்றுத் திறனாளிகள் அணியின் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்த போது எடுத்த படம். மாற்றுத்திறனாளிகள் அணியின் துணைச் செயலாளர் ஷேக் முகமது அவர்களும் உடன் இருந்தார்.